# சுற்றுச்சூழலும் பருவநிலை மாறுபாடும் : தமிழரின் அறிவுசார் மரபுவழிப் பார்வை


பதிப்பாசிரியர்கள்

முனைவர் ப. உதயகணேசன்

முனைவர் மா. சிதம்பரம்

முனைவர் ஆறு. சரவணகுமார்


தொகுதி – II



குறிஞ்சி



முல்லை



மருதம்



நெய்தல்



பாலை


Organized by

*Alagappa University & Alagappa Govt. Arts College*

Karaikudi - 630 003, Tamil Nadu.


Scanned with OKEN Scanner

# சுற்றுச்சூழலும் பருவநிலைமாறுபாடும் : தமிழரின் அறிவுசார் மரபுவழிப் பார்வை

(தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் & அழகப்பா பல்கலைக்கழகம்
(ரூசா 2.0) நிதிநல்கையின்கீழ் நடத்தப்பெற்ற பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவை)


பதிப்பாசிரியர்கள் : முனைவர் ப. உதயகணேசன்
முனைவர் மா. சிதம்பரம்
முனைவர் ஆறு. சரவணகுமார்

ஒருங்கிணைப்பாளர்கள் : முனைவர் ப. உதயகணேசன்
முனைவர் மா. சிதம்பரம்
முனைவர் ஆறு. சரவணகுமார்

இணை ஒருங்கிணைப்பாளர்கள் : திரு. செ. தினேஷ்
திரு. ச. மணிகண்டராஜா
திருமதி மு. பிரியங்கா

கருத்தரங்க முதன்மையர்கள் : முனைவர் நா. இராசேந்திரன்
மேனாள் துணைவேந்தர்
முனைவர் க. ரவி
துணைவேந்தர்
அழகப்பா பல்கலைக்கழகம்

முனைவர் சி. திருச்செல்வம்
மேனாள் முதல்வர்
முனைவர் அ. வெத்தாலெட்சுமி
முதல்வர்
அழகப்பா அரசு கலைக் கல்லூரி

பக்கங்கள் : XVI + 200 = 216

விலை : உரூ. 300/-

வெளியீடு / உரிமை : **அழகப்பா அரசு கலைக் கல்லூரி**
காரைக்குடி - 630 003.

கணினி & அச்சாக்கம் : **பிரடாக் பிரிண்ட்**
கோயம்புத்தூர் - 641 029.

அலைபேசி : 98432 73994, 63810 98020

**ISBN : 978 - 93 - 93522 - 32 - 0**




Scanned with OKEN Scanner

## பொருளடக்கம்

31. **முனைவர் க. சொல்லேருழவன்** 199
வேளாண்மையியல்

32. **முனைவர் இரா. மாரிமுத்து** 207
நீரும் - வேளாண்மையும்
(சங்க இலக்கியமும் ஐங்குறுநூறும்)

33. **S. Raja Mohamed & Dr. I. Nilofer Begum** 215
Geotourism In Tamilnadu

34. **முனைவர் கே.இரா. கமலாமுருகன்** 221
சங்கத் தமிழரின் வாழ்வியலில் வறுமையும் செம்மையும்

35. **ஆறு. செல்வமணி** 229
தமிழரின் சுற்றுச் சூழலியல் அறம்

36. **முனைவர். சே. செந்தமிழ்ப்பாவை & மு. சிவசுப்பிரமணியன்** 233
சிலப்பதிகாரம் காட்டும் நிலம்சார் சூழலியல் பதிவுகள்

37. **முனைவர் மு. சதீஸ்குமார்** 240
சங்க காலத்தின் திணைக்கோட்பாடே
சூழலியல் கோட்பாடு

38. **Mrs. A. Deepa Rani & Dr. T.K. Vedharaja** 249
The Divine Manifestations of Nature in Sri Aurobindo's
Poetry: A Study

39. **முனைவர் த. இரவிச்சந்திரன் & முனைவர் அ. சரவணகுமார்** 254
இயற்கை பேரழிவுகளும் அதன் பின் மனித நம்பிக்கையும்

40. **அழ. அமுதா** 261
அக இலக்கியங்களில் இயற்கை வருணனையில்
மலர்கள்



Scanned with OKEN Scanner

# சங்க காலத்தின் திணைக்கோட்பாடே சூழலியல் கோட்பாடு

**முனைவர் மு. சதீஸ்குமார்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை சுயநிதிப்பிரிவு,
கொங்குநாடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி),
ஞானாம்பிகை நூற்பாலை அஞ்சல், கோயம்புத்தூர் - 641 029.

இயற்கையோடு இணைந்த சிறப்பானதொரு வாழ்க்கை முறையினைக் கொண்ட மனித சமுதாயத்தைக் காட்சிப்படுத்துபவை, சங்க இலக்கியப் பாடல்கள். அப்பாடல்களில் இடம்பெற்றிருக்கும் சங்கத் தமிழரின் வாழ்வியல் பதிவுகள், அவர்களைச் சூழ்ந்த இயற்கைச் சூழலுடன் பின்னிப் பிணைந்து பிரிக்கமுடியாத ஒரு கூறாகவே மாறியுள்ளதைக் காணமுடிகின்றது. இதை நன்கு உணர்ந்திருந்த சங்கப் புலவர்கள், மனித மனத்தின் உணர்வுகளையும் இயற்கைச் சூழலின் ஈர்ப்பு நிறைந்த அழகினையும் நெருங்கிய பிணைப்போடு கூடிய இனிய உறவு கொண்டதாய்த் தமது பாடல்களில் காட்சிப்படுத்தியுள்ளனர். இப்பாடல்கள் வாயிலாக வெளிப்படும் திணைக் கோட்பாட்டில் வாயிலாகச் சங்கத் தமிழர், இயற்கைச் சூழலைப் பேணிக்காத்து அதன்மூலம் தங்களது வாழ்க்கையை வளப்படுத்திக்கொண்ட தன்மை புலப்படுகின்றது.

## திணை - சொல்லும் பொருளும்

சங்க இலக்கியங்களிலும், இலக்கண நூல்களிலும் பல்வேறு இடங்களிலும் பல்வேறு பொருள்களை உணர்த்துவதாக 'திணை' என்ற சொல் கையாளப்பட்டுள்ளது. பொதுவாகத் திணை என்பதனை 'ஒழுக்கம்' என்ற சொல் தரும் பொருளின் அடையாளமாகக் காணும் தன்மையில் இன்றைய அறிஞர்களிடம் ஒருமித்த கருத்து நிலவுகின்றது. எனினும், உண்மையில் 'திணை' என்ற கலைச்சொல்லாட்சி பழங்காலத் தமிழர்களின் அறிவு நுட்பத்தால் உருவாக்கப்பட்டது. சங்கப் பாடல்கள் இயற்கையைப் பின்னணியாக்க கொண்டு படைக்கப்பட்டவை என்பது முன்னமே அறியப்பட்டது. இயற்கைக்கும், மனித சமுதாய



Scanned with OKEN Scanner

வாழ்வியலுக்கும் உள்ள விளக்க முடியாத மேன்மையான உறவுமுறையை உணர்த்தும் சொல்லே திணை என்பதாகும்.

சங்க இலக்கியப் பாடல்களில் 'திணை' என்ற சொல்லாட்சி

***ஆடுகுடி மூத்த விழுத்திணைச் சிறந்த (புறம்.24:28)***

***வேற்றுமை இல்லா விழுத்திணைப் பிறந்து (புறம்.27:3)***

***வசைஇல் விழுத்திணைப் பிறந்த (புறம்.159:27)***

***தெறுவது அம்ம இத்திணைப் பிறத்தலே (குறு.45:5)***

***விளங்கு திணை வேந்தர் (புறம்.373:28)***

***வசையில் வான்திணைப் புரையோர் (குறிஞ்சி.205)***

ஆகிய பாடல்களுள் குறிப்பிடப்பட்டுள்ள 'திணை' என்னும் சொல் மக்கள் பிறந்த 'குடி', 'குலம்' ஆகியவற்றைக் குறிக்கின்றது.

***மேம்பட வெறுத்த அவன் தொல்திணை மூதூர்***
***(மலை.401)***

***துளங்கு குடி விழுத்திணை திருத்தி (பதி.31:12)***

***முன் திணை முதல்வர் போல நின்று (பதி.85:5)***

ஆகிய பாடலடிகளில் மக்களின் பண்பாட்டுநலன் சார்ந்த 'ஒழுக்கம்', 'நல்லநெறி' ஆகியவற்றைக் குறிக்கத் 'திணை' எனும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒழுக்கம் என்பது சமுதாயம் என்னும் கூட்டமைப்பில் தனிமனிதனுக்கு விதிக்கப்படும் அல்லது அவன் மேற்கொள்ள வேண்டிய கட்டுப்பாடுகளுடன் கூடிய விதிமுறைகளாகும். இது தனிமனிதரைச் சுற்றியுள்ள சூழலால் உண்டாக்கப்படுவதாகும்.

***அளக்கர்த் திணை விளக்காக (புறம்.229:10)***

***கானவர் மருதம் பாட அகர்***
***நீனிற முல்லைப் பல்திணை நுவல (பொருநர்.220-221)***

***நெய்தல் சான்ற வளம்பல பயின்றாங்கு***
***ஐம்பால் திணையும் கவினி அமைவர (மதுரை.325-326)***

ஆகிய பாடலடிகளில் திணை என்ற சொல் மக்கள் வாழக்கூடிய 'நிலப்பகுதி'யினைக் குறித்து வந்துள்ளது. மேற்கண்ட பாடலடிகளில்



Scanned with OKEN Scanner

திணை என்ற சொல் 'குடி', 'குலம்', 'ஒழுக்கம்', 'நல்லநெறி', 'நிலம்' ஆகியவற்றைக் குறித்து வந்துள்ளது. இவை அனைத்துமே சங்ககால மக்களின் பண்பட்ட வாழ்க்கை நிலையினை எதிரொலிப்பனவாக உள்ளன.

'திணை' என்ற சொல்லுக்கு நிகண்டுகளின் விளக்கம்.

***குலமும் ஒழுக்கமும் ஒழுக்கம் நிகழ்ந்த***
***நிலமும் திணை என நிகழ்த்தும் கிளவி***
***(திவாகரம்.2002)***

***குடித் திணை ஒழுக்கம் குலம் எனல் (பிங்கலம்.953)***

***குலமும் நிலமும் ஒழுக்கமும் திணையே (பிங்கலம்.3641)***

ஆகிய நிகண்டு நூற்பாக்களில் 'திணை' என்ற சொல் 'குலம், ஒழுக்கம், நிலம்' ஆகிய மூன்று பொருள்களைக் குறிக்க வருவதை அறியமுடிகின்றது. திவாகர நிகண்டு கூறும் விளக்கம் மக்கள் பிறந்த குலம், அவர்கள் கடைப்பிடிக்கின்ற ஒழுக்கப்பண்பு, இவை உருவாகக் காரணமாய் அமைந்த நிலம் (வாழ்விடம்) ஆகிய மூன்றினையும் இணைத்து ஒரே சொல்லாகக் குறிப்பதே 'திணை' என்று கூறுவது நோக்கத்தக்கது.

## அகராதிகளில் திணை பற்றிக் கூறப்பட்டுள்ள கருத்துகள்

செந்தமிழ் அகராதி, 'திணை - இடம், நிலம், வீடு, குலம், ஒழுக்கம், பகுப்புகள்'[1] என்று பொருள் கூறுகின்றது.

கழகத் தமிழ் அகராதி, 'திணை - இடம் ஒழுக்கம் குடி குலம் பூமி பொருள்'[2] என்று பொருளைப் பட்டியலிடுகின்றது.

ஆ.சிங்காரவேலு முதலியாரின் அபிதான சிந்தாமணி, 'திணை - 1 (க) உயர்திணை, அஃறிணை (உ) குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் இவை முறையே மலை, மணற்காடு, காடு, ஊர், கடல்சார்ந்த நிலங்கள். 2. அகத்திணை, புறத்திணை'[3] என்று திணையின் வகைகளையும், அதில் அடங்கும் இயற்கைக் கூறுகளையும் விளக்குகின்றது.

Scanned with OKEN Scanner

பழந்தமிழ்ச் சொற்களைத் தொகுத்து அவற்றின் பொருளை விளக்கும் நோக்கில் சுன்னாகம் அ. குமாரசுவாமிப்பிள்ளை இயற்றிய இலக்கியச்சொல் அகராதி, 'திணை - நிலம், குலம், ஒழுக்கம்'[4] என்று பொருள் கூறுகின்றது.

நா. கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதி, 'திணை - இடம், ஒழுக்கம், குடி, குலம், பூமி, பொருள்'[5] என்று பொருள் கூறுகின்றது.

சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட 'தமிழ் லெக்சிகன்' என்ற தமிழ்ப் பேரகராதி திணை என்பதை ஆங்கிலம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் விளக்கியுள்ளது.

1. 'திணை thinai, n. perh.id. 1. Earth, Land; பூமி (பிங்.).
2. Place, region, situation, site; இடம் (பிங்.).
3. House; வீடு. திணைபிரி புதல்வர் (பரிபா.16.7).
4. Tribe, Caste, race, family; குலம். உயர்திணை யூமன் (குறுந்.224).
5. Conduct, Custorm; ஒழுக்கம், அவன் றொ஀றிணை மூதூர் (மலைபடு.401).
6. Conventional rules of conduct laid down in the Tamil works, of two classes, viz., aka-t-tinai and purattinai; தமிழ் நூல்களில் கூறப்படும் அகமும், புறமுமாகிய ஒழுக்கம். ஐந்திணை நெறியளாவி (கம்பராமாயணம், சூர்பணகை.1).
7. (Gram) Class, as of nouns, of two kinds, viz., uyartinai and akrinai உயர்திணை, அ஀றிணைகள் ஆகிய பகுப்புகள். ஆயிரு திணையின் இசைக்குமன் சொல்லே (தொல்-சொல்.1)[6] இங்கு கூறப்பட்டுள்ள கருத்துகள் சங்க இலக்கிய, இலக்கண நூல்களிலிருந்து பெறப்பட்டவை.
8. 'இருதிணை' என்ற சொல்லிற்கு விளக்கம் தரும் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் பெருஞ்சொல்லகராதி, '1.உயர்திணை, அ஀றிணை. உயர்திணை என்மனார் மக்கட்சுட்டே, அ஀றிணை என்மனார் அவரல பிறவே, ஆயிரு திணையின் (தொல்.சொல் .1

சேனா.எ.வ). 2. இயங்கு திணை, நிலைத்திணை (செ.ப.அக). 3.அகத்திணை, புறத்திணை (மதுரை.அக.)[7] என்று விளக்குகின்றது.

இதில் 'இயங்குதிணை, நிலைத்திணை' என்ற பாகுபாடு சூழலில் உள்ள 'இடம்பெயரக்கூடிய பொருள்கள், இடம்பெயராப் பொருள்கள்' என்ற பாகுபாட்டைக் குறித்துச் சொல்லப்பட்டுள்ளது என்பது அறியப்படுகின்றது. மேலும், இவ்வகராதி 'அஃறிணை' என்பதற்குக் கூறியுள்ள 'பெ.மக்கள் அல்லாத பிற உயிர்களும், உயிரற்ற பொருள்களும் அடங்கும் இலக்கணப் பகுப்பு[8] என்னும் விளக்கமும் குறிப்பிடத்தக்கது. மேற்கண்ட விளக்கங்கள் தொல்காப்பியத்தில் இடம்பெற்று வந்துள்ளன.

## திணைக்கோட்பாட்டில் சூழலியல் கருத்தாக்கம்

பழங்கால மக்களின் வாழ்வியலையும், அறிவாற்றலையும் கண்டு தெளியும் அடிப்படைச் சான்றுகளாக இலக்கிய, இலக்கண நூல்கள் பயன்படுகின்றன. இவற்றின் வாயிலாக அக்கால மக்களின் பண்பாட்டு நெறிமுறைகளோடும், வாழ்வியல் செயல்பாடுகளோடும் அறிவியலும் வளர்ந்து இருந்துள்ளமையை அறிந்து கொள்ள முடிகின்றது. அவர்கள் பல்வேறு நிலைகளிலும் அறிவியல் அறிவுடையவராகத் திகழ்ந்தபோதும் அந்த அறிவியலைத் தனிமைப்படுத்திப் பார்க்கவில்லை மாறாகத் தம் வாழ்வியலின் பிரிக்கமுடியாத ஒன்றாகவே கொண்டிருந்தனர். பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம், மனிதர்களின் வாழ்விட இயற்கைச் சூழலை எவ்வாறு காட்சிப்படுத்த வேண்டும் என்று கூறும் நிலையில் அக்கால மக்களின் வாழ்விடச் சூழல் பற்றிப் பேசுகின்றது. மக்களின் அகவாழ்க்கையைப் பற்றிப் பேசும் நிலையில் தனிமனிதன் - குடும்பம் சார்ந்த வாழ்க்கை முறை, அவர்கள் வாழ்கின்ற இயற்கைச் சூழலுடன் அது பிரிக்கமுடியாத பிணைப்பைப் பெற்றிருந்த தன்மையினை உணர்ந்தே 'திணை' என்ற இலக்கியக் கொள்கையினை முன்வைக்கின்றது தொல்காப்பியம். இக்கொள்கையானது மக்களின் வாழ்விட மாறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது. அதனடிப்படையில் தொல்காப்பியம் இயற்கைச் சூழலை மக்களின் வாழ்விடத் தகவமைப்பு மாறுபாட்டின் அடிப்படையில் ஐந்து திணைகளாகப் பிரித்து அவற்றிற்கு

முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்ற அடையாளப் பெயர்களையும் சூட்டியுள்ளது.[9] இதன்வழி சங்க காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறை (ஒழுக்கம்) அவர்கள் வாழ்ந்த வாழ்விடப் பகுதிகளின் தன்மைக்கு ஏற்ப அமைந்திருந்ததையும், அதற்குத் 'திணை' என்ற அடையாளப் பெயர் சூட்டப்பட்டதனையும் அறியமுடிகின்றது. தொல்காப்பியத்தில் இத்திணைக் கோட்பாட்டில் புலப்படும் சூழலியல் கருத்தாக்கத்தினை கு.வி.கிருஷ்ணமூர்த்தி பின்வருமாறு விளக்குகின்றார். 'நிலங்களின் அடிப்படையில் ஐந்துவகைச் சூழல் தொகுதிகளையும் உருவாக்கிய பண்டைத் தமிழர், அவற்றிற்கென முதற்பொருள், கருப்பொருள் மற்றும் உரிப்பொருள் ஆகியவற்றையும் நிர்ணயம் செய்து சூழல் தொகுதிக் கருத்துருவுக்குச் சிறப்புச் செய்தனர். பண்பாட்டுச் சூழலின் (Cultural Ecology) அடிப்படையில் இந்த ஐவகை நிலங்களின் தன்மைகளும், பண்புகளும் விளக்கப்பட்டுள்ளன. முதல், கரு மற்றும் உரிப்பொருள்களின் அமைப்பு, நிலத்திற்கேற்ற தொழில் ஒழுக்கம் மற்றும் பண்பாட்டுச் சூழலுடன் சரிப்படுத்திப் பொருந்தி வாழும் அமைப்புகளையும், வழிமுறைகளையும், வளர்ச்சி முறைகளையும் பகுத்துக் காட்டுகின்றது. மேலும், இயற்கைச் சூழலுடனும், உயிரின வளத்தின் (biodiversity) பன்முகத் தன்மையுடனும் மக்கள் கொண்டுள்ள தகவமைவு முறைகளைக் கண்டறிவதற்குரிய தகவல் கருவிகளாகத் தாவரங்கள், மலர்கள், தொழில்கள், தெய்வங்கள், சமுதாயக் கட்டமைப்பு முதலியவற்றைப் பண்பாட்டுச் சூழலியல் குறிக்கின்றது.'[10] என்ற விளக்கம் சங்ககால மக்களின் சூழலியல் அறிவினை அறிய உதவுகின்றது.

இங்கு குறிப்பிடப்பட்ட பொருண்மைகள் புறப்பொருளில் வெவ்வேறாகத் தோன்றினாலும் அகத்தன்மையில் ஒன்றுபட்டவையாகவே அமைந்துள்ளன. ஏனெனில், இவை யாவும் அக்கால மக்களின் வாழ்க்கைமுறை செம்மையாக அமைந்திருந்ததையும், அணு அணுவாகத் திட்டமிடப்பட்டு வரையறைக்கு உட்படுத்தப்பட்டிருந்ததையுமே சுட்டி நிற்கின்றன.

***உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே***
***அஃறிணை என்மனார் அவரல பிறவே (தொல்.484)***



Scanned with OKEN Scanner

என்னும் நூற்பாவினை அடியொற்றிக் கூறப்பட்டவை. தொல்காப்பியம் கூறும் உயர்திணை, அஃறிணை என்னும் பாகுபாட்டினை (உயர்திணை - மனித சமுதாயத்தைக் குறித்து வருவது; அஃறிணை - மனித சமுதாயம் அல்லாத, மனிதன் சார்ந்துள்ள உயிருள்ள மற்றும் உயிரற்ற சூழல் காரணிகளைக் குறிப்பது' என்ற அடிப்படையிலேயே ஏற்படுத்தியுள்ளது என்பது புலப்படுகின்றது. இப்பாகுபாடு பண்டைய மக்கள் தன்னையும், இயற்கைக் கூறுகளையும் வேறுபடுத்திப் பார்த்து அறிந்த சூழலியல் பார்வையின் எதிரொலியாகும்.

பழங்காலம் தொட்டு வழங்கிவந்த 'திணை' என்ற சொல்லின் மாற்றாகச் 'சூழல்' எனும் சொல் வழங்கப்பட்டு வந்துள்ளதை,

***வாய், புலம், பாங்கர், வயின், களம், வைப்பு,***
***தேயம், வழி, உழி, திணையே, மருங்கு,***
***பால், நிலம், தலமே, வளாகம், பட்டி,***
***சூழல், தானம், இடப்பெயர்த் தொடர்பே***
***(திவாகரம்.1011)***

என்னும் திவாகரநிகண்டின் சூத்திரம் வழி அறியமுடிகின்றது. இந்நூற்பா மக்களின் வாழ்விடத்திற்கு வழங்கும் வேறு பெயர்களைப் பட்டியலிடும்பொழுது 'சூழல்' என்ற சொல்லையும் கையாண்டுள்ளது. அச்சொல் பயன்பாட்டின் தொன்மையைக் காட்டுகின்றது.

## முடிவுரை

இதுவரை கண்ட தரவுகளின்வழி சூழலியல் என்னும் கருத்தாக்கம் சங்ககால மக்களிடையே 'திணை' என்னும் வாழ்வியல் கோட்பாடாக வளர்ச்சி பெற்றிருந்ததை அறியமுடிகின்றது.

சங்க இலக்கியம் முதல் தற்கால அகராதிகள் வரையிலான அனைத்திலும் 'திணை' என்ற சொல்லிற்குத் தரும் பொருளில் பொதுத்தன்மை நிலவுவதைக் காணமுடிகின்றது.

திணை என்பதற்கு இவை தரும் பொருண்மைகளான, 'குலம், குடி, ஒழுக்கம், நெறி, வாழிடம், நிலம்' அனைத்தும் சங்ககால மக்கள் வாழ்ந்த வாழ்விடச் சூழலைக் கருத்தில்கொண்டே பேசப்பட்டுள்ளன.



Scanned with OKEN Scanner

இவற்றுள், ‘குலம், குடி’ என்பவை ஒட்டுமொத்த மனித சமுதாயத்தில் ஒரு குறிப்பிட்ட வாழ்விடப் பகுதியில் குழுமி வாழக்கூடிய சிறிய மக்கள் கூட்டத் தொகுதியைக் (இனக்குழு) குறிக்கின்றன.

‘ஒழுக்கம், நல்லநெறி’ போன்ற மனிதப் பண்பு சார்ந்த பொருண்மைகள் தனிமனிதனின் சமூக நடத்தை பற்றிப் பேசுகின்றன. அதாவது சமுதாயம் என்னும் கூட்டமைப்பில் வாழும் தனிமனிதர்கள் தங்களுக்கென்று தனியொரு நலத்தை மனதில் கொள்ளாமல், தான் இணைந்துள்ள கூட்டமைப்பின் ஒட்டுமொத்த நலனை மட்டுமே கருத்தில்கொண்டு அதற்கான சில விதிமுறைகளைக் கடைபிடிப்பதாகும்.

‘நிலம்’ என்பது ஒட்டுமொத்த மனித சமுதாயம் அல்லது இனக்குழு, தம்முடைய வாழ்க்கைத் தேவைகளான உணவு, உறைவிடம், அங்குள்ள உயிரினங்கள், உயிரற்ற பொருள்கள் போன்ற சுற்றுப்புறச் சூழலைக் குறிக்கின்றது.

மனித சமுதாயம் தன்னை நிலை நிறுத்திக் கொள்ள வேண்டிச் சூழ்நிலையில் உள்ள அனைத்தையும் அறிந்து வைத்திருக்க வேண்டியிருந்தது. சுற்றுச்சூழல் பற்றிய பண்டைய மக்களின் அறிவே ‘திணை’ என்ற சொல்லால் குறிக்கப்பட்டுள்ளது.

திணை என்பது, ‘தனிமனிதன், அவன் சார்ந்துள்ள மக்கள் குழு, குழுக்கள் ஒன்றிணைந்த சமுதாயம், சமுதாயம் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான வாழ்விடச் சூழல் காரணிகள், அக்காரணிகளைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் (இயற்கை)’ என அனைத்தையும் உள்ளடக்கிய ‘அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக் குறுக உருவாக்கிய சொல்’ ஆக அமைந்துள்ளது.

**‘திணை’** என்ற சொல் **‘சூழலியல் அறிவு’** என்ற பொருண்மையிலேயே கையாளப்பட்டு வந்துள்ளது என்பது இதன்மூலம் தெளிவாகின்றது.

Scanned with OKEN Scanner